# திருச்சபை வரலாறு

## (பாகம் 1)

ஆர். பாலா

சவறின் கிரேஸ் வெளியீடுகள்

# நூலைப்பற்றிய
# சில அறிமுக வரிகள் . . .

இந்த நூலை எழுதி வெளியிடுவதில் ஒருவிதத்தில் எனக்கு அதிக மகிழ்ச்சி. அநேக வருடங்களுக்கு முன்பு தமிழில் கிறிஸ்தவ இலக்கியங்களை வெளியிட ஆரம்பித்தபோது திருச்சபை வரலாற்றை கிறிஸ்தவர்கள் அறிந்திருக்க வேண்டியதன் அவசியத்தைப்பற்றி ‘திருமறைத்தீபம்’ முதலாவது இதழில் சுருக்கமாக எழுதியிருந்தேன். திருச்சபை வரலாறு பற்றி ஓரளவுக்காவது தெரியாமல் கிறிஸ்தவ போதகர்களும், சபைகளும் இருப்பது கிறிஸ்தவத்திற்கு பெரிய ஆபத்து என்பதை நான் அறிவேன். இன்றைக்கும் என்னுடைய போதனைகளிலும், பிரசங்கங்களிலும் திருச்சபை வரலாற்றிலிருந்து நான் உதாரணங்களைக் கொடுத்து வருகிறேன். வேதம் வரலாற்றில் ஊறிப்போயிருக்கிறது. அது வரலாற்றில் பிறந்த ஜீவ வார்த்தை. கிறிஸ்தவ வரலாற்றை அறியாமலும், அதன் அடிப்படையில் அமையாமலும் வேதத்தை நாம் படித்துத் தெளிவான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. சத்தான வேத போதனைகளும், வேத அடிப்படையில் சபைகள் இன்றைக்கு இல்லாமலும் இருப்பதற்கு திருச்சபை வரலாறு பற்றிய அறியாமையும் ஒரு முக்கிய காரணமாயிருக்கிறது. அதன் காரணமாக திருச்சபை வரலாற்றை ஆரம்பத்தில் இருந்து எழுத ஆரம்பித்தேன். இப்போது அதன் முதல் பாகமாக, திருச்சபை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் ரோமன் கத்தோலிக்க மதம் தன்னுடைய அளப்பரிய அதிகாரத்தை இழந்து கர்த்தரின் கிருபையால் விழ ஆரம்பித்த காலம் வரையுள்ள சபை வரலாற்றை வெளியிடுகிறேன். அநேக

படங்களோடு வெளிவருகின்ற இந்நூல் நிச்சயம் உங்களுக்கு சபை வரலாற்றைப் பற்றிய அறிவை வழங்கும். தொடர்ந்து ஏனைய பாகங்களையும் வெளியிடுவதே வெளியீட்டாளரின் நோக்கம்.

திருச்சபை வரலாறு என்பது, உலக வலாற்றில் திருச்சபையைக் கர்த்தர் எவ்வாறு நிறுவினார் என்பதையும் அந்தத் திருச்சபை பல்வேறு எதிர்ப்புகளுக்கும், ஆபத்துக்களுக்கும் மத்தியில் எவ்வாறு வளர்ந்து வருகிறது என்பதையும் பற்றியதாகும். ஆகவே, நடந்த, நடந்து வருகின்ற வரலாற்று நிகழ்வுகளை பல கிறிஸ்தவ வரலாற்று ஆசிரியர்கள் எழுதித் தந்துள்ள குறிப்புகளின் அடிப்படையில் இந்த வரலாற்று நூலை எழுதி வெளியிட்டிருக்கிறேன். வரலாற்று நிகழ்வுகள் பற்றிய என்னுடைய குறிப்புகளை ஆங்காங்கு தந்திருக்கிறேன். இது பொதுவாக எல்லாக் கிறிஸ்தவர்களும் வாசித்துப் பயன்பட வேண்டுமென்ற நோக்கில், இலகுவான நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

மெய்க் கிறிஸ்தவ திருச்சபை வரலாறு பற்றி பெருமளவுக்கு அறிந்திருப்பவர்கள் இன்று தமிழினத்தில் குறைவு. புரொட்டஸ்தாந்தியர்கள் (சீர்திருத்த கிறிஸ்தவர்கள்) கத்தோலிக்க மதத்தோடு ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக அதைவிட்டு விலகி வந்துவிட்டதாகவும், அவர்கள் தங்களுடைய தவறை உணர்ந்து மெய்ச்சபையான ரோமன் கத்தோலிக்க சபைக்கு ஒரு காலத்தில் வந்துவிடுவார்கள் என்றும் அதற்காக ரோமன் கத்தோலிக்க மதம் காத்திருப்பதாகவும் தன்னைத் தாய் சபையாகத் தவறாகக் கருதிக் கொண்டிருக்கும் கத்தோலிக்க மதம் ஒரு கதையை வளர்த்துவிட்டிருக்கிறது. இந்த அடிப்படையில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு இந்தியாவில் வெளியிடப்பட்டிருக்கும் ஒரு நூலை நான் ஒரு முறை வாசித்திருக்கிறேன். எனக்குத் தெரிந்து தமிழில் இருக்கும் ஒருசில நூல்களும் இந்த அடிப்படையிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. இதனால் மெய்யான திருச்சபை வரலாறு பற்றிய உண்மை தெரியாமல் இருப்பவர்கள் அநேகர்.

ரோமன் கத்தோலிக்க மதம் வேதபூர்வமான கிறிஸ்தவ திருச்சபை அல்ல என்ற உண்மையை தமிழினத்துக் கிறிஸ்தவர்

*களும், சபைகளும் உணராதவரையில் நமக்கு விடிவில்லை. முதலில், திருச்சபை பற்றிய வரலாற்று உண்மையை இங்கே கொஞ்சம் சுருக்கமாக சொல்ல அனுமதியுங்கள். இப்போது நான் சொல்லப் போவதை முதலில் வாசித்துவிட்டு அதற்குப் பிறகு நூலை வாசித்தீர்களானால் உங்களுக்கு கிறிஸ்தவ திருச்சபை வரலாற்றை விளங்கிக்கொள்ளுவது இலகுவாக இருக்கும். இயேசு கிறிஸ்துவாலும், அப்போஸ்தலர்களாலும் இந்த உலகத்தில் முதல் நூற்றாண்டில் நிறுவப்பட்ட மெய்யான திருச்சபை முதல் இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு போலிப்போதனைகளின் தீவிர தாக்குதலுக்கு உள்ளானது. இந்தப் போலிப் போதனைகள் சபையைப் பெரிதும் பாதித்தன. அப்போஸ்தலர்கள் உயிரோடிருந்த காலத்திலேயே அத்தகைய போதனைகள் எழுந்து சபையைத் தாக்கியதை புதிய ஏற்பாட்டு நிருபங்களில் வாசிக்கலாம். அதற்குப் பிறகு ஐந்தாம் நூற்றாண்டில் தன்னைக் கிறிஸ்தவனாக அறிவித்துக்கொண்ட பேரரசனான கொன்ஸ்டன்டைன் காலத்தில் சபை பெரும் சமாதானத்தை இந்த உலகத்தில் அனுபவித்தபோது, அது மேலும் போலித்தனங்களை தனக்குள் அனுமதித்த காரணத்தால் கொன்ஸ்டன்டைனின் காலத்துக்குப் பிறகு படங்கள், சிலைகள் வைத்து வணங்குதல், திருவிருந்தை 'மாஸ்' என்று அழைத்தல், சர்வ அதிகாரங்களும் கொண்ட போப்பின் தலைமைப்பதவி, வேத அடிப்படையில் இல்லாமல் மனித சிந்தனைக்கேற்ற வழியில் ஆராதனை செய்தல், மற்றும் உலக சிந்தனையின் அடிப்படையிலான சபை அமைப்பு என்று போலித்தனங்கள் படிப்படியாக, சிறிது சிறிதாக அறிமுகப்படுத்தப்பட்டு கிறிஸ்தவ சுவிசேஷம் முற்றிலும் சிதைக்கப்பட்டு ரோமன் கத்தோலிக்க மதம் இந்த உலகில் உருவாகியது. ஏழாம் நூற்றாண்டில் ரோமன் கத்தோலிக்க மதப் போதனைகள் எல்லாம் முழுமையாக உருவாகிவிட்டன. ரோமப் பேரரசு தடுமாறி விழ ஆரம்பித்தபோது கத்தோலிக்க சபையும் பெரும் தர்க்கங்களினால் மேற்கு, கிழக்குப் பகுதி சபைகள் என்று இரண்டாகப் பிரிந்து போட்டிப் போப்புகளின் தலைமையில் இயங்க ஆரம்பித்தன. இது 1054ல் உறுதியானது. முதல் போப்பாகிய மகா கிரெகரியின் காலத்துக்குப் பிறகு இந்த உலகத்தில் அதிகாரபூர்வமான சபை என்ற பெயரில் காட்சியளித்த ரோமன் கத்தோலிக்க மதம் வேதத்திற்கு முற்றிலும் புறம்பான போலிச் சபையே. இதிலிருந்து மெய்க்*

கிறிஸ்தவ சபையே போலிப்போதனைகளுக்கு ஆரம்பத்தில் இடங்கொடுத்து படிப்படியாக சீரழிந்து ரோமன் கத்தோலிக்க மதமாக உருவானதை நாம் உணர்வது அவசியம். எனவே, வேதத்தை அடியோடு குழி தோண்டிப் புதைத்துவிட்ட ரோமன் கத்தோலிக்க மதம் மெய்க் கிறிஸ்தவமல்ல.

இந்தவிதத்தில் மெய்க் கிறிஸ்தவத்திற்கு ஆபத்து ஏற்பட்டு ரோமன் கத்தோலிக்க மதம் உருவானபோதும், சபையை இந்த உலகில் தன்னுடைய மகிமைக்காக நிறுவி அதைக் கடைசிவரைக் காப்பாற்றி வளர்க்கத் தீர்மானித்திருக்கும் (மத்தேயு 16:18) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து திருச்சபை எப்போதும் இந்த உலகில் தொடர்ந்திருக்குமாறு பார்த்துக்கொள்ளுவார். தன்னுடைய அளப்பரிய கிருபையினாலும், திருச்சபையைத் தொடர்ந்து இந்த உலகத்தில் நிலைத்திருக்க வைப்பதற்காகவும் ரோமன் கத்தோலிக்க மதத்திற்குள்ளிருந்து பலருக்கு கர்த்தர் ஆத்மீக விடுதலை அளித்து சத்தியத்துக்காகவும், சபை சீர்திருத்தத்திற்காகவும் போராட வைத்தார். அப்படியெழுந்தவர்கள்தான் அத்தனேசியஸ், ஹிப்போவைச் சேர்ந்த ஆகஸ்தீன், ஜோன் விக்கிளிப், ஜோன் ஹஸ், வில்லியம் பெரல், மார்டின் லூதர், ஜோன் கல்வின், வில்லியம் டின்டேல் போன்றவர்கள். இவர்கள் அனைவரும் கர்த்தரின் சுவிசேஷத்தை விசுவாசித்து கிறிஸ்துவை மட்டுமே ஆண்டவராக ஏற்று இரட்சிப்பை அடைந்தவர்கள். ரோமப் போப்புக்கும், ரோமன் கத்தோலிக்க மதப் போதனைகளுக்கும் தலை சாய்க்க இவர்கள் அடியோடு மறுத்தார்கள். கத்தோலிக்க மதம் மெய்யான திருச்சபை அல்ல என்பதை உணர்ந்து வேதபூர்வமாக திருச்சபையை மறுபடியும் நிலைநாட்ட இவர்கள் போராடினார்கள். பலர் அதற்காக கத்தோலிக்க மதத்தினரின் வெறிச்செயலால் தங்களுடைய உயிரையும், குடும்பத்தாரையும் இழக்க நேரிட்டது. இத்தகையோர் சிந்திய இரத்தத்தை அடித்தளமாக அமைத்து பதினாறாம் நூற்றாண்டில் மறுபடியும் உண்மையான திருச்சபை இந்த உலகத்தில் நிலைநாட்டப்பட்டது. அதைத்தான் திருச்சபை சீர்திருத்தம் (Reformation of the Church) என்ற பெயரில் கிறிஸ்தவ வரலாற்று ஆசிரியர்கள் அழைக்கிறார்கள்.

திருச்சபை வரலாற்றின் முதல் பாகமாக வெளிவரும்

*இந்த நூலில் நீங்கள் திருச்சபை ஆரம்பத்தில் எப்படி அமைக்கப்பட்டது என்பதையும், அதற்குப் பின் அதற்குள் போலிப்போதனைகளும், பிசாசின் கையாட்களும் நுழைந்து ரோமன் கத்தோலிக்க மதம் எப்படிப் படிப்படியாக உருவானது என்பதையும், அது பின்பு எவ்வாறு தன்னுடைய அதிகாரத்தை இழந்து விழ ஆரம்பித்தது என்பதையும் அறிந்துகொள்ளப் போகிறீர்கள். திருச்சபை பற்றி நான் மேலை விளக்கிய இந்த உண்மை இன்றைக்கு தெளிவாக நம்மவர்கள் மத்தியில் விளக்கப்படுவதில்லை. மெய்க் கிறிஸ்தவத்தை ரோமன் கத்தோலிக்க மதத்திலிருந்து பிரித்துக்காட்டாமலிருப்பது கிறிஸ்தவத்தையும், கிறிஸ்தவ வேதத்தையும் மாசுபடுத்துகின்ற பாரதுரமான செயலாகும். திருச்சபை வரலாற்றின் இந்த முதல் பாகம் சத்தியத்தைப் பாதுகாத்து பின்பற்றாது அசட்டையாக இருந்துவிட்டால் பிசாசு எப்படியெல்லாம் இன்றும் சபையைத் தாக்கி அதை அழிக்க முனைவான் என்ற பாடத்தையும் நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. வெளிப்படுத்தல் 12 ஆம் அதிகாரத்தில் விளக்கப்பட்டிருப்பதுபோல் கர்த்தருக்கும் பிசாசுக்கும் நடக்கும் போராட்டத்தின் ஓர் அங்கமாகவே இந்த உலகில் பிசாசு திருச்சபையைத் தாக்கி வருகிறான். அதில் இறுதி வெற்றி நிச்சயம் கர்த்தருக்கே.*

*இந்த நூல் வெளியிடப்பட பலவிதங்களில் மிகவும் உறுதுணையாக இருந்திருக்கும் சென்னை கிருபை சீர்திருத்த சபையின் போதகர் ஜேம்ஸை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. அவருடைய துணையில்லாமல் இந்த நூல் வெளிவந்திருக்க முடியாது. தன்னுடைய மகிமைக்காக கர்த்தர் இந்த நூலைப் பயன்படுத்தட்டும். இதை வாசிக்கப்போகும் உங்களுக்கு திருச்சபை வரலாற்றில் ஆர்வமும் அறிவும் மட்டுமல்லாது சத்தியத்தில் மேலும் வாஞ்சையும், வளர்ச்சியும் ஏற்பட இந்நூல் துணைசெய்யுமானால் அதுவே எங்கள் உழைப்புக்குக் கிடைத்த ஆசீர்வாதமாக அமையும்.*

# பொருளடக்கம்


நூலைப்பற்றிய சில அறிமுக வரிகள் . . .......................................3

ஆதித் திருச்சபை ......................................................................... 13

இரண்டாம் நூற்றாண்டு......................................................................20

ஆதி சபை சந்தித்த கள்ளப் போதனைகள்....................................30

நாசரீன்ஸ் (**Nazarenes**)........................................................... 30

எபியனைட்ஸ் (**Ebionites**)...........................................................31

நொஸ்டிஸிசம் (**Gnosticism**)......................................................31

மொன்டனிசம் (**Montanism**) .................................................... 33

சபைப் பிதாக்கள்.............................................................................37

புதிய ஏற்பாட்டுத் தொகுப்பு
(**New Testament Canon**)......................................................... 37

விசுவாச அறிக்கை ......................................................................38

அப்போஸ்தலர்களைப் போன்ற சபைத்தலைவர்கள்
(**Apostolic succession**) ............................................................. 40

கோலைச் சேர்ந்த ஐரேனியஸ்
(**Irenaeus of Gaul, 180-250 A.D.**) ............................................41

அலெக்சாந்திரியாவும், கார்த்தேஜும் .......................................42

# ஆதித் திருச்சபை

*திருச்சபை வரலாறு பற்றி எழுதும்போது எங்கிருந்து ஆரம்பிப்பது என்ற கேள்வி தோன்றும். சிலர் பழைய ஏற்பாட்டில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்பார்கள். சிலர் அதை அப்போஸ்தல நடபடிகளில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்பர். பழைய ஏற்பாட்டில் சபை இல்லை என்ற வாதம் தவறானது; இது டிஸ்பென்சேஷனலிசத்தினால் உருவாக்கப் பட்ட போதனை. அப்போஸ்தலர் 13:8, வனாந்தரத்தில் ஒரு சபை இருந்ததாகப் போதிக்கிறது. பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் கிறிஸ்துவின் திருச்சபை அங்கத்தவர்களே. ஆகவே, பழைய ஏற்பாட்டில் சபையையே பார்க்க முடியாது என்று போதிப்பது தவறு. சபை அங்கத்தவராக இருக்க விசுவாசம் மட்டுமே தேவைப்படுமானால் அவ்விசுவாசத்தைப் பெற்றிருந்த பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் நிச்சயம் திருச்சபை அங்கத்தவர்களே. ஆனால், இன்னொரு விதத்தில் புதிய ஏற்பாட்டில் திருச்சபை உருவானது என்ற கூற்றும் பொருந்தும். ஏனெனில், திருச்சபை புதிய ஏற்பாட்டில் காணப்படும் விதத்தில் பழைய ஏற்பாட்டில் காணப்படவில்லை. புதிய ஏற்பாட்டில் திருச்சபை புதிய உடன்படிக்கையின் சபையாக, ஓர் அமைப்பாக யூத மதத்தில் இருந்தும், புறஜாதியார் மத்தியில் இருந்தும் வரும் மக்களைக் கொண்டு விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்த சபையாகக் காட்சி அளிக்கிறது. இதனால்தான், இயேசுவும் மத்தேயு 16:18ல் "நான் என் சபையைக் கட்டுவேன்"* ("I will build My Church" - future tense) *என்று எதிர்காலத்தைக் குறிப்பிட்டு பேசியுள்ளார். பழைய ஏற்பாட்டில் சபை நிச்சயமாக இருந்தபோதும்,*

*புதிய ஏற்பாட்டில் அது முன்பிருந்திராத வகையில் ஒரு கட்டுக்கோப்பான அமைப்பாக மரித்து உயிர்தெழுந்த இயேசு கிறிஸ்துவைத் தலைக்கல்லாகக் கொண்டு எழுந்தது.*

*கிறிஸ்துவின் திருச்சபை அப்போஸ்தலர் காலத்தில் எவ்வாறு அமைக்கப்பட்டு வளர்ந்தது என்ற வரலாற்றை விவரித்துக் கூறுகிறது அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம். திருச்சபை அமைக்கப்பட்டு எவ்வாறு வளர்ந்தது என்பதிலிருந்து பவுல் ரோமில் சிறைவைக்கப்பட்டு ரோமப் பேரரசனின் முன் கொண்டுவரப்படுவதற்காகக் காத்திருந்த காலம்வரை, கி.பி. 30-64 வரையுள்ள காலப்பகுதியின் நிகழ்வுகளைப் படம்பிடித்துக் காட்டுகிறது இப்புத்தகம்.*


*பரிசுத்த ஆவி வந்திறங்கியபின் பேதுருவின் பிரசங்கத்தை பெந்தகொஸ்தே நாளில் கேட்டு 3000 பேர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர். அவர்கள் ஏற்கனவே இருந்த 120 பேருடன் இணைக்கப்பட்டு புதிய ஏற்பாட்டு சபை உருவானது. அதன்பிறகு அது வெகு வேகமாக வளர்ந்தது. கிறிஸ்தவர்களை அழிக்கப் புறப்பட்ட சவுல் தமஸ்கு வீதியில் கிறிஸ்துவின் அழைப்பைப் பெற்று புறஜாதியார்களுக்கான அப்போஸ்தலனாக எருசலேம் சபையோடு சேர்ந்து பணிபுரியத் தொடங்கினார். பின்பு அந்தியோகியா சபையால் பர்னபாவுடன் சபை அமைக்கும் ஊழியத்திற்காக ஜெபத்துடன் அனுப்பி வைக்கப்பட்டார். பவுலோடு சீலாவும், தீமோத்தேயுவும், லூக்காவும் இத்தகைய சபை அமைப்புப் பணிக்காக பல இடங்களுக்கும் ஆசியா, ஐரோப்பாவுக்கும் சென்றனர். பல இடங்களிலும் திருச்சபைகள் அமைக்கப்பட்டன. ஆரம்பத்தில் அவை நேரடியாக அப்போஸ்தலரின் மேற்பார்வையில் இருந்தன.*



**பேதுரு**



**யாக்கோபு**



**பவுல்**

இக்காலப்பகுதியில் ரோமர்களின் ஆட்சியில் உலகின் பெரும்பகுதி இருந்தது. அவர்களுடைய ஆட்சியில் கிரேக்க மொழி எல்லா இடங்களிலும் பரவி மக்களால் பேசப்பட்டு வந்ததும், துரிதப் பிரயாணத்திற்கு வசதியாக நல்ல பாதைகள் எல்லா இடங்களிலும் அமைக்கப்பட்டிருந்ததும், சுவிசேஷம் எல்லாப்பகுதிகளிலும் பிரசங்கிக்கப்படுவதற்கு வசதியாக அமைந்தது. பொதுவாக ரோமர்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. அவர்களைவிட யூதர்களே கிறிஸ்தவத்திற்குப் பேரெதிரிகளாக இருந்தனர். அப்போஸ்தல நிருபங்கள் எழுதப்பட்ட காலங்களில் யூதர்களே கிறிஸ்தவ சுவிசேஷத்தைத் தடைசெய்யவும் அப்போஸ்தலர்களைத் தாக்கவும் பெருமுயற்சி எடுத்ததை அப்போஸ்தலருடைய நடபடிகள் விளக்குகின்றது. இக்காலங்களில் ரோமர் கிறிஸ்தவர்களுக்குப் பெருந்துன்பம் அளிக்கவில்லை. பவுலின் ஊழியத்தின் காரணமாக ரோமப்படை வீரர்களில் சிலரும் கிறிஸ்துவை அறிந்து விசுவாசிகளாக இருந்திருப்பதை வேதம் எடுத்துக் காட்டுகின்றது.

ஆனால், ரோமப் பேரரசனான நீரோவின் காலத்தில் (கி.பி. 54-68) நிலைமை முற்றாக மாறியது. நீரோ மிகவும் மோசமானதொரு கொடுமைக்காரனாக இருந்தான். ரோம் எறிந்து கொண்டிருந்த போது அவன் பிடில் (Fiddle) வாசித்து தன்னை மகிழ்வித்துக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் கதையே அவன் எத்தகைய மனிதன் என்பதை விளக்குகிறது. கி.பி. 64 இல் ரோமில் பெருந்தீ ஏற்பட்டது. இதனை நீரோவே ஆரம்பித்ததாகவும் கூறப்படுகின்றது. ஆனால், இப்பழியை நீரோ கிறிஸ்தவர்கள் மேல் போட்டான். கிறிஸ்தவர்களுக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இருக்கவில்லை. கிறிஸ்தவர்களை நீரோ இக்காலத்தில் மிகக் கொடூரமாக நடத்தியதை வரலாற்றாசிரியர்கள் எழுதி வைத்துள்ளனர். கிறிஸ்தவர்களை மிருகத் தோலினால் சுற்றிக் கொடிய



**நீரோ**





**ரோம அரசர்களால் கிறிஸ்தவர்கள்**
**துன்புறுத்தப்படும் காட்சி**

வனவிலங்குகள் அவர்களைக் கொன்று தின்னும்படி அவைகள் முன்னால் தூக்கி எறியும்படிச் செய்தான். தன்னுடைய தோட்டத்தில் இரவு நேர விருந்துபுசாரங்களின்போது கிறிஸ்தவர்களைக் கம்பத்தில் உயிரோடு கட்டி எண்ணை ஊற்றி எரித்து விளக்குக் கம்பங்களாகப் பயன்படுத்தினான் நீரோ. மிகக் கொடூரமாக கிறிஸ்தவர்களை நடத்தியவன் நீரோ.

இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ரோம எழுத்தாளரான சூடோனிஸ் (Suetonius), கிறிஸ்தவர்கள் விஷமத்தனமான மூட நம்பிக்கைகளைப் பின்பற்றும் ஒரு கூட்டம் என்று எழுதி வைத்தார். ஆனால், அம்மூட நம்பிக்கைகள் என்ன என்பதை